**30.10.2025**

**MCOP.No.27/2023**

**ம.சா.3 : தீபா**

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விபத்து சமயத்தில் நான் விபத்து நடந்த இடத்தில் இல்லை. சாட்சி சொல்லி சென்ற சுதந்திரபிரியா எனது அண்ணி. மேற்படி எனது அண்ணி சொன்னவாறு தான் விபத்து நடந்தது என்று சொன்னால் சரிதான். எனது அம்மா இறந்துவிட்டதால் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். எனது அம்மா டைலர் வேலை செய்து கொண்டு இருந்தார். எனது அம்மா வீட்டிலேயே தீபா காஜா பட்டன் சென்டர் என்ற நிறுவனத்தை நான் நடத்தி வந்தேன். எனக்கு திருமணம் ஆன பிறகு எனது அம்மாவும் அப்பாவும் அதை நடத்தி வந்தார்கள். அதன் மூலம் எனது அம்மாவிற்கு ரூ.20000/- மற்றும் அப்பாவிற்கு ரூ.40000/- வருமானம் வரும். எனது அப்பா வெளிநாட்டில் வேலை செய்து திரும்பி வந்தார். விபத்து சமயத்தில் கடையை தான் நடத்தி வந்தார். எனது அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இந்த கடையை தவிர வேறு வருமானம் கிடையாது.

2) மேற்படி கடை பதிவு செய்யப்படவில்லை. அதற்கான கணக்கு வரவு செலவுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல எனது அம்மாவிற்கு ரூ.20000/- மற்றும் அப்பாவிற்கு ரூ.40000/- வருமானம் தவறு என்றும் அவர்கள் தலா ரூ.7000/- வீதம் தான் சம்பாதித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் எனது கணவருடன் சென்னையில் இருந்தேன். எனது கணவர் மாதம் ரூ.30000 கேட்டரிங் வேலை மூலம் சம்பாதித்து வருகிறார். எனது அம்மாவின் ஆதார் கார்டில் 26.11.1962 என்று போடப்பட்டுள்ளது சரிதான். அப்போது விபத்து சமயத்தில் எனது அம்மாவிற்கு சுமார் 65 வயதிற்கு மேல் என்று சொன்னால் இல்லை. எனது தாய்க்கு வயது சுமார் 57 தான் இருக்கும். நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தில் எனது தாய் தந்தை இருவரும் இறந்துவிட்டனர். தாய் இறந்ததாக

MCOP.No.26/2023 என் தந்தை திருநாவுக்கரசு இறந்ததற்காக MCOP.No.27/2023 என்ற மனு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை ஆதார் கார்டை தாக்கல் செய்துள்ளேன். என் தாயாருக்கும் தந்தைக்கும் 5 வயது வித்தியாசம் இருக்கும் என்று சொன்னால் தெரியாது.

**<u>4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

3) மேற்படி விபத்திற்கு லாரி ஓட்டுநரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரிதான். எனவே இந்த மனுவை பொறுத்தும் MCOP.No.26/2023 என்ற மனுவை பொறுத்தும் 4ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.10.30 18:07:07 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**